முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில்

5 ஆண்டுகளில் ரூ.19,694 கோடியில் 4,29,394 வீடுகள்!

வெற்றிப் பாதையில் முத்திரை பதிக்கும் 'திராவிட மாடல்' ஆட்சி!

சென்னை, மார்ச் 10 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் ரூ.19,694 கோடியில் ஏழைகளுக்காக 4,29,394 வீடுகள்! ரூ. 482 கோடியில் ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளில் 5,281கட்டமைப்புகள் மேம்பாடு! 25.56 இலட்சம் ஏழை குடும்பங்களுக்கு இலவச வீடு மனை பட்டா! என பல்வேறு வெற்றிப் பாதையில் முத்திரை பதிக்கும் எல்லார்க்கும் எல்லாம் என்னும் தத்துவத்திற்கேற்ப திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தென்கடல் வளாகம் பொதுமை இன்றி வெண்குடை நிழற்றிய ஒருமை யோர்க்கும் நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான் கடுமா பார்க்கும் கல்லா ஒருவருக்கும் உண்பது நாழி உடுப்பது இரண்டே பிறவும் எல்லாம் ஓரொக் கும்மே! என்று புறநானூறு 189 ஆம் பாடல் சொல்கிறது. அதாவது அரசன் ஆயினும், ஆண்டி ஆயினும் அனைவரும் உண்பது ஒரு நாழி அளவுள்ள உணவே. அவர்களுக்கு இடுப்பில் உடுக்கும் துணியும், உடம்பின் மேல் அணியும் துணியும் என இரண்டு துணிகள்தான் தேவை; இதுபோல் பிற அனைத்தும் எல்லோர்க்கும் ஒரே அளவில்தான் தேவைப்படும் என்கிறது இந்த புறநானூற்றுப் பாடல் இவற்றுடன் எல்லோரும் மழை, வெயில் காலங்களிலும் புயல் வெள்ளக் காலங்களிலும் பாதுகாப்பாகத் தங்கி வாழ ஒரு வீடு என்பது மிகவும் முக்கியம் ஒவ்வொருவருக்கும் சொந்த வீடு வேண்டும் என்பதனை, 'எலிவளை ஆயினும் தனி வளை தேவை' என நம் நாட்டுப் பழமொழி கூறும்.

இவற்றின் அடிப்படையில்தான் நம் 'திராவிட மாடல்' அரசு அனைவருக்கும் தேவைப்படும் அனைத்தையும் நிறைவேற்றி வருகிறது.

எல்லார்க்கும் எல்லாம் என்னும் 'திராவிட மாடல்' அரசின் தத்துவத்தைத் தான் இந்தப் புறநானூற்றுப் பாடல் முழங்குகிறது.

கலைஞர் கனவு இல்லம்

எல்லோர்க்கும் உணவு தேவை. உணவுப் பொருள்களை ரேஷன் கடைகளில் இலவசமாக வழங்குகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் மூலம் நேரடி வருவாய் இல்லாத மகளிருக்கு நேரடியாகவே மாதம் ரூ.1000 தருகிறது. இந்த 1000 ரூபாயைக் கொண்டு தேவையானவைகளை வாங்கிக் கொள் என வழிகாட்டுகிறது திராவிட மாடல் அரசு!

அடுத்து, எல்லோர்க்கும் வீடு வேண்டும் அல்லவா?அதற்காகத்தான் கலைஞர் கனவு இல்லம் திட்டம்!

தமிழ்நாட்டில் உள்ள குடிசைகள் எல்லாவற்றையும் அகற்றிவிட்டு எல்லோர்க்கும் கான்கிரீட் வீடுகள் கட்டித்தர வேண்டும் என்பது திராவிட மாடல் அரசின் இலக்கு. இதற்காக 2030 ஆம் ஆண்டிற்குள் 8 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டப்பட வேண்டும் என முடிவு செய்துள்ளது. ஏழை எளிய மக்கள் வீடு கட்டிக்கொள்ள தலா ரூ. 3 இலட்சத்து 50 ஆயிரம் வீதம் 2 இலட்சம் குடும்பங்களுக்கு மொத்தம் ரூ.7,000 கோடி மதிப்பிலான திட்டத்தை அனும தித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் இரண்டே ஆண்டுகளில் 2 இலட்சம் வீடுகளில் 1,79,850 கான்கிரீட் வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மீதி வீடுகள் கட்டப்படுகின்றன. இந்த ஆண்டில் மேலும் 1 இலட்சம் வீடுகள் ரூ. 3500 கோடியில் கட்டப்படும் என அறிவித்துள்ளது திராவிட மாடல் அரசு.

இதில் ஒரு ஒப்பீடு

2016-2021 ஐந்து ஆண்டுகளில் முந்தைய ஆட்சியில் 1 இலட்சம் வீடுகள் தான் கட்டப்பட்டன. ஆனால் 2024-2026 இரண்டே ஆண்டுகளில் 1,79,850 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு, மேலும் 1 இலட்சத்து 20 ஆயிரத்து 150 வீடுகள் கட்டப்படுகின்றன.

கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் மட்டும் அல்ல!

இலங்கை தமிழர்களுக்கு ரூ.589 கோடி ஒதுக்கீட்டில் 10,045 நிரந்தர வீடுகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு 7,469 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

மேலும் தொடர்ந்து 1 இலட்சத்து 79 ஆயிரத்து 850 வீடுகள் கட்டப்படுகின்றன.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மூலம்

ரூ.3,058 கோடியில் 2.63 இலட்சம் வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. **அடுக்கு மாடி குடியிருப்புகள் திட்டத்தின்கீழ்** ரூ.8,384 கோடியில் 58,211 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு; மேலும் 53,467 வீடுகளின் கட்டுமான பணிகள் நடைபெற்றுவருகின்றன.

இந்தத் திட்டத்தில் ஒரு ஒப்பீடு

2016-2021 முந்தைய ஆட்சியில் 27,688 வீடுகள் மட்டுமே கட்டப்பட்டன. ஆனால், 2021-2026 திராவிட மாடல் ஆட்சியில் 58,211 வீடுகள் கட்டிமுடிக்கப்பட்டு சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது.

திராவிட மாடல் அரசு அறிமுகப்படுத்திய அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டத்தில்

ரூ.482 கோடி மதிப்பீட்டில் 5281 உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வழங்கப்பட்ட வீட்டுமனை பட்டாக்கள்

2021-2026 திராவிட மாடல் ஆட்சியில் 23.56 இலட்சம் ஏழைகளுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

பழங்குடியினர் நலம் நாடும் தொல்குடி திட்டத்தில்

ரூ. 221 கோடி மதிப்பீட்டில் 7,674 பழங்குடியின மக்களுக்கு வீடுகள் கட்டப்பட்டுள்ளன.

ஒற்றைச் சாளர முறை திட்டத்தின்கீழ்

24,446 மனைப்பிரிவு விண்ணப்பங்களுக்கும், 2002 கட்டட அனுமதி விண்ணப்பங்களுக்கு 'திராவிட மாடல்' அரசு அனுமதி வழங்கியுள்ளது.

ஆகமொத்தம், 'திராவிட மாடல்' அரசு 2021 முதல் ஐந்து ஆண்டுகளில் ரூ.19,694 கோடியில் ஏழைகளுக்காக 4,29,394 வீடுகளைக் கட்டியுள்ளது. ரூ.482 கோடியில் ஆதிதிராவிடர் வாழும் பகுதிகளில் 5,281 கட்டமைப்புப் பணிகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 23.56 இலட்சம் ஏழைகளின் குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

இப்படி எல்லாருக்கும் எல்லாம் என்னும் தத்துவத்தின்படி 'திராவிட மாடல்' அரசு ஏழை எளிய நலிந்த சமுதாய மக்களின் அடிப்படைத் தேவைகளை எல்லாம் படிப்படியாக நிறைவேற்றி தமிழ்நாட்டிற்குப் பெருமைகளைச் சேர்க்கிறது!

பொதுக்குழு உறுப்பினர் எஸ்.சங்கர் ஏற்பாட்டில் – நகரச் செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமையில்

திருவேற்காடு நகரம் 15 வார்டில் 730 மகளிர்களுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் வழங்கினார்!

திருவள்ளூர், மார்ச்.10

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க.ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு திருவள்ளூர் மத்திய மாவட்ட திருவேற்காடு நகரம் 15 வது வார்டு திமுக சார்பில் மாதிரவேடு பகுதியில் பொதுகுழு உறுப்பினர் நகர மன்ற உறுப்பினர் எஸ். சங்கர் ஏற்பாட்டில் நடைபெற்றது இதில் நகர செயலாளர் என்.இ.கே.மூர்த்தி தலைமை வகித்தார்.

மாவட்ட செயலாளரும், அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு 730 மகளிருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை பல்வேறு விளையாட்டுப் போட்டிகளை வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகள் மற்றும் பரிசுத்தொகை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

அப்போது அமைச்சர் சா.மு. நாசர் பேசியதாவது:

இந்த ஆட்சியில் நம் திராவிட மாடல் முதலமைச்சர் சொன்னதையும், சொல்லாததையும் செய்துள்ளார். மகளிர் உரிமைத் தொகையை நிறுத்துவதற்கு சதி திட்டம் தீட்டினார்கள். ஆனால் அதை முறியடித்து 3 மாத மகளிர் உரிமைத்தொகை மற்றும் கோடைகால ஊக்கத் தொகை என ரூ. 5 ஆயிரம் வழங்கினார்.

இந்த ஆட்சியில் பெண்களுக்காக ஏராளமான திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ் நாட்டு பெண்கள் ஒவ்வொரு வரையும் தனது சகோதரியாக நினைத்து முதலமைச்சர் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். மக்களுக்கான நல்ல திட்டங்கள் தொடர்வதற்கு அவருக்கு வரும் தேர்தலில் ஆதரவு கொடுத்து மீண்டும் முதலமைச்சராக வேண்டும். அனைவருக்கும் இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்கள். என்றார் அவர். இதில் . மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஏ.ஜெ.பவுல், நகர நிர்வாகிகள் குமாரசாமி, ஜெ.பாண்டுரங்கன், பானுஅரசு, பி.பன்னீர்செல்வம், தெய்வசிகாமணி, கே.பி.எஸ். சுதாகர், சத்தியகிரி, டி.வி. இளங்கோவன், துரைகோபால், பொன்.மனோகரன், கெஜா, மனோகரன், ஜெகன், சாந்தி ராஜா, ஆசை தம்பி, ரஜனி, அப்பு(எ) ஜெபராஜ், குடியரசு, நரேஷ், சுபா சங்கரன், ஜெயராமன், லோகநாதன், சங்கர், கண்ணன் ரோஸ் குமார்,ஏழுமலை, அமலேஸ்வரி, கோமதி, செல்லம்மாள், செல்வி, சாந்தி, விஜயலட்சுமி, ரம்யா, ஜானகி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

எழும்பூர் தொகுதி: சேத்துப்பட்டு பகுதி

மகளிர் சுயஉதவிக் குழுக்கள் நடத்திய மகளிர் தின விழா-2026

இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

சென்னை, மார்ச்.10-

எழும்பூர் தொகுதி, வார்டு எண்.108, சேத்துப்பட்டு பகுதியில் செயல்பட்டு வரும் முப்பதுக்கும் மேற்பட்ட மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இணைந்து 07.03.2026 அன்று எழும்பூர், சென்னை சமுதாயப் பணி கல்லூரி கலையரங்கத்தில் நடத்திய "மகளிர் தின விழா-2026" மற்றும் "மகளிர் சுயஉதவிக் குழுக்களின் 5-ஆம் ஆண்டு தொடக்க விழா"வில் கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு, குத்துவிளக்கு ஏற்றி விழாவைத் தொடங்கி வைத்துச் சிறப்புரையாற்றினார்.

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் கல்வி மேம்பாட்டு அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் ப.இளங்கோவன் ஒருங்கிணைத்து நடத்திய இவ்விழாவிற்கு, மகளிர் சுயஉதவிக் குழு தலைவர்-C.R.P. திருமதி ஆர்த்தி ஸ்டீபன்ராஜ் தலைமை தாங்கினார். TNLUM அண்ணா நகர் மண்டல ஒருங்கிணைப்பாளர் திருமதி ஜெ.நிர்மலா வரவேற்புரை ஆற்றினார்.

சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தனது உரையில், "இந்தியாவிற்குச் சுதந்திரம் கிடைக்கும் முன்பே, நீதிக் கட்சியின் ஆட்சியின்போதே பெண்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும் எனக் குரல் எழுப்பிய மண் தமிழ்நாடு. டாக்டர் அம்பேத்கர் அவர்கள் சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டத்தில் பெண்களுக்கு வாக்குரிமை அளிப்பதைச் சேர்ப்பதற்கு உறுதுணையாக இருந்தது தமிழ்நாடுதான். அதிகாரத்தைப் பரவலாக்கிப் பெண்களுக்கும் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் எனும் நோக்கில் இந்தியாவிலேயே முதன் முதலாக உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு அளித்தவர் முத்தமிழறிஞர் கலைஞர். அது போல கல்வி, வேலைவாய்ப்புகளில் பெண்களுக்கு இட ஒதுக்கீடு வழங்கியதும் திராவிட முன்னேற்றக் கழக அரசுதான். இப்பொழுது நீங்களெல்லாம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் சார்பில் மகளிர் தின விழாவைக் கொண்டாடக் கூடியிருக்கிறீர்கள். இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தமிழ்நாட்டில் அமைத்திட வழிவகுத்துத் தந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான். 1989-இல் அவர் முதல மைச்சராக இருந்த காலத்தில்தான் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. பெண்ணுரிமை, பாலினச் சமத்துவம், பெண்களுக்கு அதிகாரமளிப்பது ஆகியவற்றில் முன்னோடியாக இருந்து வருவது திராவிட முன்னேற்றக் கழகம்தான்" எனப் பெண்களுக்கு அதிகாரமளிப்பதில் கழகம் ஆற்றிய பங்களிப்புகளைக் குறிப்பிட்டுப் பேசினார்.

சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் தனது உரையின் பின், மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சேர்ந்த 300 பெண்களுக்கு நலத்திட்ட உதவியாக ஹாட்பாக்ஸ் வழங்கினார்.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, எழும்பூர் கிளையின் முதுநிலை மேலாளர் மு.அருள்மணியரசு, அகில இந்திய பொது இன்சூரன்ஸ் பணியாளர்கள் சங்கத்தின் தேசியச் செயலாளர் ச. சவரிமுத்து, சென்னை மாவட்ட ஆதி திராவடர் நலக் குழு உறுப்பினர் வழக்கறிஞர் முனைவர் சி.வி.உமாசங்கரி, ஓய்வு பெற்ற சென்னை மாநகராட்சி மருத்துவ அலுவலர் வீ.இரகுநாதன், சென்னை சமுதாயப் பணி கல்லூரியைச் சேர்ந்த புலத்தலைவர் முனைவர் ஆர்.சுபாஷினி, துறைத் தலைவர் முனைவர் ஆ. ஏனோக், பேராசிரியர் மரிய ஜெரோம் உள்ளிட்டோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு உரையாற்றினாரகள்.

இவ்விழாவில் பறையிசை ஆட்டம், மேஜிக் ஷோ மற்றும் சென்னை சமுதாயப் பணி கல்லூரியின் சார்பில் "வீதி" எனும் நாடகம் உள்ளிட்ட பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. விழாக் குழுவினரின் ஏற்பாட்டில் விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை இரவு உணவு வழங்கப்பட்டது.

பேராசிரியர் சுப.வீரபாண்டியன் சிறப்புரை!

நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் முதலமைச்சர் பிறந்தநாள் விழா - தேசிய மகளிர் தின விழா !

சபா. இராசேந்திரன் எம்.எல்.ஏ. ஏற்பாட்டில் 3000 மகளிர்க்கு நல உதவிகள்!

கடலூர் ,மார்ச் 10-

கடலூர் மேற்கு மாவட்டம், நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் தமிழ்நாடு முதல்வர் கழகத் தலைவர் அவர்களின் பிறந்தநாள் விழா மற்றும் தேசிய மகளிர் தினத்தை முன்னிட்டு, 3,000 மகளிருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

காடாம்புலியூர் AV மஹாலில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் திருமிகு. சபா. இராசேந்திரன் தலைமை தாங்கினார். திராவிட இயக்கத் தமிழர் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் சிறப்புரையாற்றி னார். தொகுதி பார்வையாளர் பா. துரைசாமி வரவேற்புரை வழங்கினார்

நிகழ்ச்சியில் பேசிய பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள், திராவிட இயக்க வரலாறு, முதலமைச்சர் அவர்களால் மகளிர் நலனுக்காக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு நலத்திட்டங்கள் குறித்து விரிவாகக் குறிப்பிட்டார்.

விழாவில் முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவர் சபா. பாலமுருகன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் க.அறிவழகன், ஒன்றிய அவைத்தலைவர் ராஜா, குறிஞ்சிப்பாடி மேற்கு ஒன்றிய செயலாளர் குண சேகரன், நெய்வேலி நகரச் செயலாளர் குருநாதன், பண்ருட்டி வடக்கு ஒன்றியச் செயலாளர் சந்தோஷ்குமார், மாவட்டப் பிரதிநிதி ஆடலரசன், ஒன்றியத் துணைச் செயலாளர்கள் செல்வகுமார், சுமதி நந்தகோபால், வழக்கறிஞர் அரிதாஸ், இளைஞர் அணி அமைப்பாளர் க.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி தொகுதி ஒருங்கிணைப்பாளர் ஆனந்தன், மகளிர் அணி நிர்வாகிகள் ஜெயந்தி நடராஜன், பாக்கியலட்சுமி, சந்தியா சாமுண்டீஸ்வரி,சங்கரி, விஜயசாந்தி, கனிமொழி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் எல்லாபுரம் வடக்கு ஒன்றிய திமுக அலுவலகம் திறப்பு விழா தலைமை செயற்குழு உறுப்பினரும் ஒன்றிய செயலாளருமான எல்லாபுரம் ஜெ.மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இதில் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தி.மு.க. அலுவலகத்தை மாவட்ட கழக பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் முன்னிலையில் திறந்து வைத்தார். உடன் டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ, மாநில மாவட்ட நிர்வாகிகள் ப.அப்துல்மாலிக், பிரபுகஜேந்திரன், சி.எச்.சேகர், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ரமேஷ், பா.செ.குணசேகரன், ஏ.வி.ராமமூர்த்தி, கி.வேணுஆனந்த், ஜான்பொன்னுசாமி,ஆ.ராஜா, அபிராமிகுமரவேல், கே.வி.லோகேஷ், நடுக்குத்தகைகே.சுரேஷ்குமார், ரவிச்சந்திரன், சிவாஜி, டில்லிசங்கர், ஜமுனா அப்புன், டி.ரவி சண்முகம் , வெங்கடேசன், சிவசங்கர், ரவிக்குமார் கா.சம்பத், பா.தனசேகரன், ஜெயலலிதா சசிதரன் ஜி.சுமன் பி.சங்கள், சித்ரா முனுசாமி, சீனிவாசன், ஐ.ராஜா, உள்பட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டார்கள்.

ஒன்றிய அரசைக் கண்டித்து போராட்டம்!

வளைகுடா போர் குறித்த ஒன்றிய அரசின் நிலைப்பாடுகளுக்கு எதிர்ப்பு!

மாநிலங்களவையில் – எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வெளிநடப்பு!

புதுடெல்லி, மார்ச் 10 -

வளைகுடா போர் குறித்த ஒன்றிய அரசின் நிலைப்பாடுகளைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் 2ம் நாள் அமர்வு நேற்று தொடங்கியது.

மாநிலங்களவை தொடங்கியதும், வளைகுடா நிலவரம் குறித்து வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அறிக்கை ஒன்றை தாக்கல் செய்தார்.

அப்போது, காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, விவாதம் நடத்த அனுமதி அளிக்காமல் அமைச்சர் அறிக்கை தாக்கல் செய்வதற்கு எதிர்ப்பு தெரிவித்தார். ஆனால், விவாதம் நடத்த அவைத் தலைவர் அனுமதி அளிக்க வில்லை.

இதனைக் கண்டித்து எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அனைவரும் அவையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

இதனைத் தொடர்ந்து நாடாளுமன்ற வளாகத்தில் அவர்கள் ராகுல் காந்தி தலைமையில் போராட்டத்தில் ஈடுபட்டனர். அமெரிக்க அதிபரின் நிர்பந்தங்களுக்கு பணியும் பிரதமர் மோடியைக் கண்டித்து அவர்கள் முழக்கங்களை எழுப்பினர்.

மக்களவை அடுத்தடுத்து ஒத்திவைப்பு

முன்னதாக காலை 11 மணிக்கு மக்களவை தொடங்கியதும், மறைந்த உறுப்பினர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக் கப்பட்டது. பின்னர் அவை கூடியதும்,

வளைகுடா போர், அமெரிக்க நிர்ப் பந்தங்கள் குறித்து விவாதம் நடத்தக் கோரி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர்.

ஆனால், சபாநாயகர் இதற்கு அனுமதி மறுத்த தால், கோரிக்கைகளை வலியுறுத்தி எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்க மிட்டனர்.

இதனைத் தொடர்ந்து அவை பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப் படுவதாக சபாநாயகர் அறிவித்தார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் மேற்கு ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஸ்ரீதர் இல்ல திருமண விழா நடைபெற்றது. இதில் மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு மணமக்கள் தீபன்–மோனிஷ் ஆகியோரை வாழ்த்தினார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர் ஆ.ராஜா நிர்வாகிகள் ஆறுமுகம் பா.து.தமிழரசன் மா.தீபன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.